# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, நீர்ப்பாசன (திருத்தச்) சட்டம்

---

*[1990, செப்தெம்பர் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது**

---

*1990, நவெம்பர் மாதம் 08 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறை நிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : ரூபா 1.00

# 1990 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, நீர்ப்பாசன (திருத்தச்) சட்டம்

[1990, செப்தெம்பர் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 67/87
1925

## நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, நீர்ப்பாசன (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தியெட்டாம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தால் உட்புகுத்தப்பட்டதும், 1983 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டதுமான (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான நீர்ப் பாசனக் கட்டளைச் சட்டத்தின் 78அ என்னும் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "நீதிவான் நீதிமன்றம்" என்ற சொற்களுக்குப் பதிலாக "சிறு உரிமைக் கோரிக்கைகள் நீதிமன்றம்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது. 453 ஆம் அத்தியாயத்தின் 78 அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அரசாங்க அதிபர்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவைத் திருத்துதல்.

'"அரசாங்க அதிபர்" என்பது ஒரு மேலதிக அரசாங்க அதிபரையும், ஓர் உதவி அரசாங்க அதிபரையும், மாகாணமொன்றின் அமைச்சர்கள் சபையின் நீர்ப்பாசனம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் செயலாளரையும்; அத்துடன் மாகாண சபையொன்றின் பெரும்பாகச் செயலாளர் ஒருவரையும் உள்ளடக்கும்;'.

4. இச்சட்டத்தின் சிங்கள தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலு வலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*